கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 228/2019

பி.வா.சா.1– பழனிச்சாமி

23.11.2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) வாதி என்ன தாவா தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா தடம் எனக்கு 1982ம் ஆண்டைய அம்மணியம்மாள் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பி.வா.சா.ஆ.2ன் படி பாத்தியம் என்றால் சர்வே 409ல் உள்ள பாதையை பயன்படுத்திக் கொள்ள எழுதிக் கொடுத்துள்ளார்கள். அதற்கும் தாவா பாதைக்கும் சம்பந்தமில்லை. தாவா பாதையும் பி.வா.சா.ஆ.2ல் என் அம்மா எழுதிக் கொடுத்த ஆவணத்தில் கண்டுள்ள பாதையும் ஒன்று தான் என்றால் சரியல்ல.

2) வாதி என்ன தடம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளார் என எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஏற்பட்ட தேதியில் அம்மணியம்மாள் 5 ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரிதான். 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் க.ச.408 புறம்போக்கு இட்டேரியில் இருந்து க.ச.409/1பி பூமியை சென்றடையலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் உமது பாக பூமிக்கு புறம்போக்கு இட்டேரியில் க.ச.எண்.409/1பி நெ. காலையில் கிழமேலாகவும் தென்வடலாகவும் உள்ள பொது தடத்தில் கால்நடை, வண்டி வகையறாக்கள் ஓட்டிச் செல்லத்தக்கது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொல்லப்பட்டவாறு தடம் பூமியில் உள்ளது என்றால் உள்ளது என்று சாட்சியமளித்து விட்டு சாட்சி பிறகு அவ்வாறு இல்லை இரண்டு பக்கமும் வீடு அதனுடைய வாசல் உள்ளதாக சொல்கிறார். 40 வருடங்களாக எங்கள் சுவாதீனத்தில் உள்ளது. சாட்சி தன்னிச்சையாக முன்வந்து தேங்காய் உரிக்கச் செல்வதற்காக அந்த இடம் இருப்பதாக கூறுகிறார்.

3) நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாதி பாதையை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் இடத்திற்கு வந்து அறிவிப்பு கொடுத்த போது நான் பெற மறுத்தேன் என்றால் தவறு. வாதி 2, 3 நபர்களுடன் வந்து படம் பிடித்து சென்றார் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. மொத்தம் 10 பேர் வந்தார்கள். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு கொடுத்த அறிக்கை மற்றும் வரைபட விவரங்களை நான் தெரிந்து கொண்டேன் என்றால் நீதிமன்ற ஆணையர் சொத்துக்களை பார்வையிட்டது எனக்கு தெரியாது.

4) தாவா சொத்தில் உள்ள பாதையை நான் தென்னந்தோப்பிற்கு செல்வதற்காக பயன்படுத்தி வருகிறேன் என்பதைக் காண்பிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து நிரூபிக்கவில்லை என்றால் சரிதான். புறம்போக்கு இட்டேரி க.ச.408 ல் இருந்த எனது சொத்தான 409/1பி ல் உள்ள பாதையில் வாதிக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி உரிமை இல்லை என்றும் எனக்கு மட்டும் தான் பி.வா.சா.ஆ.2 ன் படி பாத்தியம் என்று சொல்கிறீர்களா என்றால் ஆமாம்.

5) வா.சா. ஆ.1 ஆவணத்தில் தடம் கொடுத்துள்ளார்கள் அதன் அடிப்படையில் தான் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி பெயரில் ஏற்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப் பார்க்காமல் வாதி பாதையை பயன்படுத்த உரிமையில்லை என தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை பாதையை பயன்படுத்தக் கூடாது என தடுத்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு வந்த பிறகு வாதிக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் தற்சமயம் இல்லை. ஆகையால் இந்த சூழ்நிலையில் 24.08.2019 ம் தேதி காவல் நிலையத்தில் வாதியின் மீது புகார் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

6) பி.வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்கள் தாவாவிற்கு பிறகு வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஏற்பட்ட அன்றுள னது அம்மா அம்மணியம்மாள் 5 ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளார். அதன் அடிப்படையில் கிரயம் பெற்ற நபர்கள் அனைவருக்கும் தாவா பாதையில் உரிமை உண்டு என்றால் சரியல்ல. வாதிகள் தாவா பாதையை

**பயன்படுத்திக் கொள்ள தடுக்க எனக்சகு எந்த உரிமையும் இ,ல்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.